## கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை 2021-2022 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு சட்டம் 2017-ல் ஆணையிடப்பட்டவாறு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487/கனிமம்/2016 நாள் 01.11.2017-இன்படி கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை உருவாக்கப்பட்டது மேலும் அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 62/2017, நாள் 17.11.2017-ன்படி கடலூர் மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர்களின் பதிவி காலம் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு புதுப்பிக்கப்படவேண்டும். அவ்வாறு புதுப்பிக்கும்பட்சத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் வழிகாட்டுதல்களின் படி புதிய உறுப்பினர்கள் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டயையின் அங்கத்தினராக மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487/கனிமம்/2016 நாள் 23.02.2022-இன்படி நியமனம் செய்யப்பட்டனர் நியமனம் செய்யப்பட்ட அறக்கட்டளை உறுப்பனர்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மைக்குழு அமைப்பு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், கடலூர். | பாராளமன்ற உறுப்பினர்கள் கடலூர் மற்றும் சிதம்பரம். |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். | சட்ட மன்ற உறுப்பினர்கள், கடலூர், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம், திட்டக்குடி, நெய்வேலி, மற்றும் பண்ருட்டி |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். | மாவட்ட ஆட்சியர், கடலூர். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர். | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். |
| 5. | துணைஇயக்குநர், சுகாதாரப்பணிகள், கடலூர். | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். |

| | | |
|---|---|---|
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், கடலூர். | திட்ட இயக்குநர், சுகாதாரப்பணிகள், கடலூர். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, (PAPD), கடலூர். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, கடலூர். |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கடலூர். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கடலூர். |
| 10. | முனைவர். T.சுந்தரமூர்த்தி, எம்.எஸ்சி. (வன உயிர் உயிரியல்), பி.எட்., பி.எச்.டி. (விலங்கியல்), உதவி இயக்குநர், சி.ஆர்.பி., சுற்றுச்சூழல் கல்வி மையம், சென்னை. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம், கடலூர். |
| 11. | | மாவட்ட வன அலுவலர், கடலூர். |
| 12. | | முதன்மை பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கடலூர். |
| 13. | | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, கடலூர். |
| 14. | | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். |
| 15. | | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். |
| 16. | | துணை இயக்குநர் (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப்பணிகள், கடலூர். |
| 17. | | வருவாய் கோட்டாசியர், கடலூர் மற்றும் சிதம்பரம். |
| 18. | | சார் ஆட்சியர், விருத்தாசலம். |

2) கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, கடலூர் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 6577395044) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) கடலூர் மாவட்டத்தில் ஒரு பெருங்கனிம சுரங்கக் குத்தகை 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டதால், அந்த ஒரு பெருங்கனிம குவாரிக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. 12.01.2015-க்கு பின்னர் பெருங்கனிம குத்தகை ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு, உரிம கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது

வருவாய் கிராமங்கள்

4) கடலூர் மாவட்டத்தில் 905 கிராம பஞ்சாயத்துகள் சுரங்க பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

5) கடலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2022 வரை ரூ.425,42,80,072/- (ரூபாய் நானூற்று இருபத்தைந்து கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து என்பதாயிரத்து எழுபத்தி இரண்டு) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2021-2022 குத்தகைதாரர்களிடம் வசூலிக்கப்பட்ட மாவட்ட அறக்கட்டளை நிதி ரூ.83,93,45,096/- மற்றும் விதிகளை மீறி கனிமங்களை கடத்தி சென்ற வாகனங்கள் பெயரில் உயர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் வசூலிக்கப்பட்ட மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி ரூ.25,35,841/- மற்றும் மாவட்ட கனிம அறக்கட்டனை சேமிப்பு கணக்கின் மூலம் வரப்பெற்ற வட்டி ரூ. 2,29,61,542/- ஆக மொத்தம் ரூ.86,48,42,479/- மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன.

6) 2021-2022 ஆம் நிதியாண்டில் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு கூட்டம் மற்றும் மேலாண்மைக்குழு கூட்டம் கொரோனா பெருந்தொற்றின் காரணமாகவும் மற்றும் மேற்படி நிர்வாக குழு மற்றும் மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் பதிவி காலம் முடிவடைந்த காரணத்தினாலும் கூட்டம் ஏதும் நடைபெறவில்லை. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.487/கனிமம்/2016, நாள்: 23.02.2022 அன்று மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின் படி கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியின் நிர்வாக மற்றும் மேலாண்மைகுழுவின் புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

7) 2021-2022 ஆம் நிதியாண்டின் முடிவில் மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூ.86,48,42,479/- நிதியனாது 2022-2023 ஆம் நிதியாண்டில் நலத்திட்டப்பணிகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(21/3) 9.9.22

தலைவர்,
கடலூர் மாவட்ட கனிம
அறக்கட்டளை நிதி /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

25-11
02/09/22

2/9/2022.